மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத்
தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை - 2021

தரம் ஐந்து மாணவர்களுக்கான

முன்னோடிப் பரீட்சை - இல-10

வினாத்தாள் - I

சுட்டெண்:- .....

நேரம் :- 1 மணித்தியாலம்


● பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்.
- உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- முன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.
- இவ்வினாத்தாளில் 40 வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே தருக.
- ஒவ்வொரு வினாவிற்கும் மூன்று விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றிடையே ஒவ்வொரு வினாவிற்கும் உரிய சரியான விடையைத் தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.
- செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

✱ கீழே இலக்கம் (01), (02) ஆகிய வினாக்களில் மூன்று கூட்டங்களுக்கு உரிய பொருட்களைக் கொண்ட கூண்டைத் தெரிவு செய்க.

(01) (1)




(2)




(3)



(02) (1)




(2)



(3)



(03)



அருகே A, B, C ஆகிய ஒவ்வொரு வட்டத்திலும் உள்ள மிகப்பெரிய இலக்கத்தைப் பயன்படுத்தி ஆக்கத்தக்க மிகச்சிறிய எண்,

(1) 679 (2) 976 (3) 841

✱ அட்டவணையிலுள்ள தகவல்களுக்கேற்ப இலக்கம் (04), (05) ஆகிய வினாக்களுக்குரிய விடைகளைத் தெரிவு செய்க.

மாதங்கள்	மே	ஜூன்	ஜூலை	ஆகஸ்ட்	செப்டெம்பர்	B
நாட்களின் எண்ணிக்கை	31	61	92	A	153	160

(04) A கூண்டிற்குப் பொருத்தமான எண்,

(1) 128 (2) 123 (3) 132


(05) B கூண்டிற்குப் பொருத்தமான மாதமும் திகதியும்,

(1) ஒக்டோபர் 31 (2) செப்டெம்பர் 7 (3) ஒக்டோபர் 7

(06) சதுர வடிவக் காணி ஒன்றின் ஒரு பக்கத்திலிருந்து பார்க்கும்போது 12 கம்பங்கள் காணக்கிடைக்கும். அக்காணியின் நான்கு பக்கங்களிலும் சம எண்ணிக்கையிலான கம்பங்கள் நாட்டப்பட்டுள்ளன. அதன்படி, அச்சதுர வடிவக் காணியைச் சுற்றி நாட்டப்பட்டுள்ள கம்பங்களின் மொத்த எண்ணிக்கை,


(1) 48 (2) 44 (3) 42

(07) கீழே காட்டப்பட்டுள்ள ஒவ்வொரு உருவினதும் பருமன் அதிகரித்துச் செல்லும் ஒழுங்கில் எழுதப்பட்டுள்ள விடையைத் தெரிவு செய்க.



(1) A, C, D, B (2) C, A, B, D (3) D, A, C, B

08) ஒன்றுடன் ஒன்றை இணைப்பதன் மூலம் சதுரம் ஒன்றை அமைத்துக்கொள்வதற்குக் குறைவாகும் கார்ட்போர்ட் அட்டையைத் தெரிவு செய்க.




(1)



(2)



(3)



LEARN EASY

- KNOWLEDGE IS POWER -

www.learneasy.lk || www.lkedu.lk

76667-4945

zoom Online வகுப்புக்கள்

பாலர் வகுப்பு முதல் A/L வரை

தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூல வகுப்புக்கள்





ICT

Maths **English**

Tamil **History**

Science

தனித்துவமான
புலமைப்பரிசில் பரீட்சை
வகுப்புக்கள் தரம் I தொடக்கம்
5 வரை நடைபெறுகின்றன


Contact

76667-4945

(09) பிள்ளையொன்று A எனும் இடத்திலிருந்து ஒழுங்குமுறையே வடக்கு மற்றும் மேற்குத் திசைகளுக்கு 40m வீதம் பயணித்தது. அதன்பின், அவ்விடத்திலிருந்து தெற்குத் திசைக்கு 10m உம், கிழக்குத் திசைக்கு 40m உம் பயணித்தது. அதன்படி, அப்பிள்ளை ஆரம்பித்த இடத்திலிருந்து இப்போது இருக்கும் தூரம்,

(1) 20m (2) 30m (3) 130m

(10) 2 இலிருந்து 7 வரை இலக்கங்கள் இடப்பட்டுள்ள தாயக்கட்டை ஒன்றின் எதிரெதிர் முகங்களில் உள்ள இலக்கங்களின் கூட்டுத்தொகை 9 ஆகும். அதன்படி, அத்தாயக்கட்டையைத் தெரிவு செய்க.

(1) 

(2) 

(3) 

(11) கணேஷிற்கு இருக்கும் பிள்ளைகளின் எண்ணிக்கை 8 ஆகும். அதன்படி, கணேஷின் மகளுக்கு இருக்கும் சகோதர, சகோதரிகளின் எண்ணிக்கை,

(1) சகோதரர்கள் 5, சகோதரிகள் 3 (2) சகோதரர்கள் 2, சகோதரிகள் 4 (3) சகோதரர்கள் 3, சகோதரிகள் 4

(12) பெட்டியொன்றில் சம நிறையுடைய சீனிப் பைக்கற்றுக்கள் இரண்டு வைக்கப்பட்டபோது பெட்டியின் நிறை 1200g ஆகும். அப்பெட்டியினுள் அதே நிறையுடைய மேலும் ஒரு சீனிப் பைக்கற்று வைக்கப்பட்ட பின் பெட்டியின் நிறை 1700g ஆகும். அதன்படி, வெற்றுப் பெட்டியின் நிறை,

(1) 300g (2) 200g (3) 100g

(13) ஒரே நேரத்தில் ஆரம்பிக்கப்பட்ட ஓட்டப்போட்டியில் கலந்துகொண்ட 5 போட்டியாளர்கள் போட்டியை முடித்துக்கொண்ட நேரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

* **பைசர் :- பி.ப 3.45**
* **சச்சின் :- பி.ப 3.47**
* **ரவி :- பி.ப 3.42**
* **தினேஷ் :- பி.ப 3.49**
* **வசீம் :- பி.ப 3.40**

அதன்படி, முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்றுக்கொண்ட போட்டியாளர்கள் முறையே,

(1) தினேஷ் - சச்சின் - பைசர் (2) ரவி - வசீம் - தினேஷ் (3) வசீம் - ரவி - பைசர்

(14) குமாரிடம் ரூபா 1.00 இன் முத்திரைகள், ரூபா 2.00 இன் முத்திரைகள், ரூபா 5.00 இன் முத்திரைகள் என்பன சம எண்ணிக்கை வீதம் உள்ளன. குமாரிடம் உள்ள முத்திரைகளின் மொத்த எண்ணிக்கை 9 ஆகும். அதன்படி, குமாரிடம் உள்ள முத்திரைகளின் மொத்தப் பெறுமதி,

(1) ரூபா 24.00 (2) ரூபா 36.00 (3) ரூபா 72.00

(15) குறித்த வருடமொன்றின் பெப்ரவரி மாதத்திலுள்ள திங்கட்கிழமைகளின் மொத்த எண்ணிக்கை 5 ஆகும். அதன்படி, அம்மாதத்திலுள்ள திங்கட்கிழமைகளின் கூட்டுத்தொகை,


(1) 78 (2) 80 (3) 75

(16) XV தொடக்கம் XX வரையுள்ள உரோம எண்குறிகளை எழுதும்போது அதிகமாக எழுதப்படும் உரோம எண்குறி,

(1) X (2) I (3) V

(17) 24 இன் $\frac{1}{2}$ உடன் 20 இன் $\frac{1}{4}$ ஐக் கூட்டினால் கிடைப்பது,

(1) 16 (2) 14 (3) 17

(18) 

இக்கனவுருவைப் புள்ளிக்கோடுகளின் வழியே வெட்டுவதன் மூலம் கிடைக்கும் முகத்தின் நீளம், அகலம் என்பன முறையே,

(1) நீளம் - 30cm , அகலம் - 10cm


(2) நீளம் - 10cm , அகலம் - 4cm

(3) நீளம் - 15cm , அகலம் - 4cm

(19) கமலை விட சுரேஷ் 8 வருடங்கள் மூத்தவன். கமல் பிறந்தது 21 ஆம் நூற்றாண்டில் ஆகும். அதன்படி, அவர்கள் இருவரும் பிறந்திருக்கக்கூடிய வருடங்கள்,

(1) கமல் 1990 ஆம் ஆண்டு, சுரேஷ் 1982 ஆம் ஆண்டு (2) கமல் 1998 ஆம் ஆண்டு, சுரேஷ் 2006 ஆம் ஆண்டு

(3) கமல் 2003 ஆம் ஆண்டு, சுரேஷ் 1995 ஆம் ஆண்டு

(20) 


உண்டியல் ஒன்றிலுள்ள நாணயக் குற்றிகளின் எண்ணிக்கை தொடர்பான விபரங்கள் இவ்வட்ட வரைபில் காட்டப்பட்டுள்ளன. உண்டியலில் உள்ள ரூபா 5.00 நாணயக் குற்றிகளின் மொத்தப் பெறுமதி ரூபா 20.00 ஆகும். அதன்படி, உண்டியலில் உள்ள நாணயக் குற்றிகளின் மொத்த எண்ணிக்கை,

(1) 16 (2) 20 (3) 12

www.tkedu.lk

(21) கபிலிடம் சம அளவிலான சதுர வடிவக் கார்ட்போர்ட் துண்டுகள் 31 உள்ளன. 6 சதுரமுகிகளை அமைத்துக்கொள்வதற்கு அவனுக்கு இன்னும் தேவைப்படும் அத்தகைய கார்ட்போர்ட் துண்டுகளின் எண்ணிக்கை,

(1) 4 (2) 5 (3) 7

(22) 

இச்சதுர வடிவக் கம்பிச் சட்டகத்தின் ஒருபக்க நீளம் 6cm ஆகும். இக்கம்பிச் சட்டகம் A எனும் இடத்தினால் வெட்டி விரிக்கப்பட்டு எல்லா பக்கங்களும் நீளத்தில் சமனான முக்கோண வடிவம் ஒன்று அமைக்கப்பட்டது. அம்முக்கோண வடிவத்தின் ஒருபக்க நீளம்,

(1) 8cm (2) 7cm (3) 9cm



(23) மே மாதத்தின் இறுதி நாள் புதன்கிழமை ஆகும். அதன்படி, அம்மாதத்தின் திங்கட்கிழமைகளின் கூட்டுத்தொகை,




(1) 80 (2) 70 (3) 75

(24) குறியீடு ▲ ஐ ஒரு தடவையும், குறியீடு ■ ஐ இரண்டு தடவைகளும் பயன்படுத்தி எண் 224 எழுதப்பட்டிருந்தது. 224 உடன் 200 ஐக் கூட்டும்போது கிடைக்கும் விடையைக் குறியீட்டினால் காட்டுவது,

(1) ■▲■ (2) ▲■▲ (3) ▲■■

(25) அடைப்புகளுக்குள் உள்ள இரு உருக்களை ஒன்றன் மீது ஒன்றாக வைக்கும்போது கிடைக்கும் எண்,

(1)  (2)  (3) 

(26) ஒரே சீரான வேகத்தில் பயணிக்கும் துவிச்சக்கர வண்டி ஒன்றுக்கு சம தூரத்தில் நாட்டப்பட்டிருக்கும் 5 மின்கம்பங்களைக் கடப்பதற்கு 4 நிமிடங்கள் எடுத்தது. அதன்படி, 7 மின்கம்பங்களைக் கடப்பதற்கு எடுக்கும் நேரம்,

(1) 7 நிமிடங்கள் (2) 5 நிமிடங்கள் (3) 6 நிமிடங்கள்

(27) 9 படிகள் உள்ள படிக்கட்டு ஒன்றில் ரமேஷ் முதல் படியிலும் சுனில் 9 ஆவது படியிலும் நிற்கின்றனர். ரமேஷ் 1 படி ஏறும்போது சுனில் 1 படி இறங்கினான். அதன்படி, ரமேஷ் மற்றும் சுனில் சந்திப்பது,

(1) 4 ஆவது படியில் (2) 5 ஆவது படியில் (3) 6 ஆவது படியில்

(28) கீழே தரப்பட்டுள்ள எண்களில் ஒரு கோலம் உண்டாவதற்கு ஒரு எண் நீக்கப்படவும் வேறொரு எண் சேர்க்கப்படவும் வேண்டும். அவ்விரண்டு எண்களும் முறையே,

3 , 9 , 15 , 21 , 27 , 31 , 39 , 45

(1) நீக்கப்பட வேண்டிய எண் - 31 , சேர்க்கப்பட வேண்டிய எண் - 33

(2) நீக்கப்பட வேண்டிய எண் - 39 , சேர்க்கப்பட வேண்டிய எண் - 37

(3) நீக்கப்பட வேண்டிய எண் - 31 , சேர்க்கப்பட வேண்டிய எண் - 32

(29) சிவாவிடம் ரூபா 10.00 , ரூபா 5.00 , ரூபா 2.00 ஆகிய நாணய வகைகள் மாத்திரம் உள்ளன. அவற்றின் மொத்தப் பெறுமதி ரூபா 30.00 ஆகும். அதன்படி, சிவாவிடம் உள்ள ரூபா 5.00 நாணயக் குற்றிகளின் எண்ணிக்கை,

(1) 2 (2) 1 (3) 3

(30)

2	4	6	3	5	7	2	9	4	1	8

அருகருகே உள்ள இரு எண்களின் கூட்டுத்தொகை 9 ஆகவுள்ள சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை,

(1) 2 (2) 3 (3) 4


(31) கடிகாரம் ஒன்றில் மணித்தியால முள் ஒரு தடவை சுழலும்போது நிமிட முள் சுழலும் தடவைகளின் எண்ணிக்கை,

(1) 6 தடவைகள் (2) 4 தடவைகள் (3) 12 தடவைகள்

www.ikedu.lk

(32) வரிசையொன்றில் மாலாவிற்கும் சீதாவிற்கும் இடையில் 4 பேர் நின்றுகொண்டிருந்தனர். மாலாவிற்கு முன்னால் 3 பேரும், சீதாவிற்குப் பின்னால் 2 பேரும் நின்றுகொண்டிருந்தனர். அதன்படி, அவ்வரிசையில் நின்றுகொண்டிருந்தவர்களின் மொத்த எண்ணிக்கை,

(1) 9 (2) 11 (3) 10

(33) 

இவ்வுரு அமைக்கப்பட்டுள்ளது ஈர்க்குத் துண்டுகளினால் ஆகும். இவ்வுருவை அமைப்பதற்குப் பயன்படுத்திய ஈர்க்குத் துண்டுகளின் மொத்த நீளம்,


(1) 18cm (2) 26cm (3) 36cm

(34) ஒரு குடும்பத்தில் நான்கு சகோதரிகள் இருக்கின்றனர். அவ் ஒவ்வொரு சகோதரிக்கும் ஒரு சகோதரன் வீதம் இருக்கின்றான். அதன்படி, அக்குடும்பத்தில் இருக்கும் மொத்த சகோதர, சகோதரிகளின் எண்ணிக்கை,

(1) 5 (2) 8 (3) 6

(35) மின்குமிழ் கோர்வையொன்றில் நீலம், சிவப்பு, சிவப்பு, நீலம், சிவப்பு, சிவப்பு ..... என்னும் ஒழுங்கில் 23 மின்குமிழ்கள் தொங்கவிடப்பட்டிருந்தன. முதலாவது மின்குமிழ் நீல நிறமாகும். அதன்படி, அம்மின்குமிழ் கோர்வையில் உள்ள நீல நிற மின்குமிழ்களின் எண்ணிக்கை,

(1) 10 (2) 8 (3) 9


(36) 

இவ்விரண்டு கடதாசிக் கீலங்களிலும் நிழற்றப்பட்டுள்ள பகுதிகளை ஒன்றன் மீது ஒன்று வைத்து ஒட்டினால் கிடைக்கும் முழுக்கடதாசிக் கீலத்தினதும் மொத்த நீளம்,

(1) 32cm (2) 40cm (3) 28cm


(37) ஒரு மாதத்தில் புதன்கிழமை, வியாழக்கிழமை, வெள்ளிக்கிழமை ஆகிய நாட்கள் 5 வீதம் உள்ளன. அதன்படி, அம்மாதத்திலுள்ள நாட்களின் எண்ணிக்கை,

(1) 31 (2) 30 (3) 29

(38) 

மேலே தொடர்புகளிலுள்ள உருக்களின் மூலம் காட்டப்பட்டுள்ளது 10 இற்கும் குறைந்த எண்களாகும். அதன்படி,
● - இவ்வுருவின் பெறுமானம்,

(1) 4 (2) 3 (3) 5

(39) 

இவ்வுருவிலுள்ள A, B ஆகிய இரு வட்டங்களுக்கும் வரவேண்டிய இரு எண்களில் ஒன்று மற்றையதன் மூன்று மடங்காகும். உருவிலுள்ள நான்கு எண்களினதும் கூட்டுத்தொகை 21 ஆகும். அதன்படி, A, B ஆகிய வட்டங்களுக்குரிய எண்கள் முறையே,

(1) 2, 6 (2) 1, 3 (3) 3, 9

(40) பின்வரும் பாடலை வாசித்து, வினவப்பட்டுள்ள வினாவிற்கான விடையைத் தெரிவு செய்க.

காற்றில் ஏறிச் செல்லும் வண்டி
எந்த வண்டி
காடு மலை காட்டிச் செல்லும்
அந்த வண்டி

இப்பாடலில் குறிப்பிடப்பட்டுள்ள வண்டி,

(1) கார் (2) புகையிரதம் (3) விமானம்

www.ikeduk

(முழுப் பதிப்புரிமையுடையது) (All Rights Reserved)

மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத்
தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை - 2021
தரம் ஐந்து மாணவர்களுக்கான

முன்னோடிப் பரீட்சை - இல-10

வினாத்தாள் - II

சுட்டெண் :- .....

நேரம் :- 1 மணித்தியாலம் 15 நிமிடங்கள்

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்.
* உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பிலுள்ளே இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
* மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.
* இவ்வினாத்தாளில் 60 வினாக்கள் உள்ளன. சில வினாக்களில் உபபகுதிகளும் உள்ளன.
* எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே எழுதுக.
* விடைகள் எழுதப்பட வேண்டிய வினாக்களின் விடைகளைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
* விடையின் கீழ்க் கோடிடுமாறு கேட்கப்பட்டிருக்கும்போது சரியான விடையைத் தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.
* செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

01) பின்வரும் பந்தியை வாசித்து, வினவப்பட்டுள்ள வினாக்களுக்கான விடைகளை எழுதுக.

கடம் கர்நாடக இசையுடன் தொடர்புடைய தாள வாத்தியக் கருவிகளில் ஒன்றாகும். அது மிக எளிமையான ஓர் இசைக்கருவியாகும். இது ஒரு பெரிய மண்பானையில் தட்டுவதன் மூலம் ஒலி எழுப்பப்படும் இசைக்கருவியாகும். கட இசைக்கலைஞர்கள் அமர்ந்த நிலையில் கடத்தின் வாயை ஒட்ட வைத்துக்கொண்டு இரண்டு கைகளாலும் அடித்து வாசிப்பர்.

(i) பெயர் அடைமொழி ஒன்றினை எழுதுக. .....

(ii) பந்தியிலுள்ள சினைப்பெயர் ஒன்றினை எழுதுக. .....

(iii) "கருவியில்" என்பதன் பன்மை வடிவம் யாது? .....

(iv) "சத்தம்" என்ற சொல்லின் ஒத்த சொல் யாது? .....

(v) உயர்திணை பன்மைப் பெயர்ச்சொல்லை எழுதுக. .....

02) தடித்த எழுத்துகளில் தரப்பட்டுள்ள சொற்களுக்குப் பொருத்தமான எதிர்கருத்துச் சொற்களை இட்டு வாக்கியத்தை மீண்டும் எழுதுக.

சத்தியம் பேசுபவர்கள் எல்லோராலும **விரும்பப்படுவர்**. :- .....

03) பின்வரும் பெண்பால் வாக்கியத்தை ஆண்பால் வாக்கியமாக மாற்றி எழுதுக.

சிறுமி சுவற்றில் சித்திரம் வரைந்தாள். :- .....

04) பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்தினதும் வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லை கூண்டினுள்ளிருந்து தெரிவுசெய்து புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

அலகு , அழகு

(i) பூங்காவின் ..... மனதைக் கவர்ந்தது. (ii) பருந்தின் ..... மிகவும் கூர்மையானது.

05) பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்தினதும் வெற்றிடத்திற்குப் பொருத்தமான எழுவாயைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

(i) ..... நாளை வீட்டுக்கு வருவீர்களா? (ii) ..... நூலகத்திற்குச் சென்றோம்.

(iii) ..... இனிமையாகப் பாடல் பாடுவேன்.

06) கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய், பயனிலைத் தொடர்பு சரியாயின் (✓) எனவும், பிழையாயின் (✗) எனவும் வாக்கியத்திற்கு எதிரேயுள்ள அடைப்பிலுள்ளே அடையாளம் இடுக.

(i) சிங்கத்தைக் கண்ட மான் கூட்டம் ஓடி ஒளிந்தது. ( )

(ii) எனது தம்பி நன்றாகப் புத்தகம் வாசிப்பேன். ( )

(iii) தம்பியும் தங்கையும் மைதானத்திற்குச் சென்றனர். ( )

07) பின்வரும் சொற்தொகுதிகள் ஒவ்வொன்றிலும் சரியாக எழுத்துக் கூட்டப்பட்டுள்ள சொல்லைத் தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.

(i) மின்னஞ்சல் / மின்னஞ்சல் / மின்னஞ்சள் (ii) குழிர்பானம் / குளிர்பாணம் / குளிர்பானம்

08) பின்வரும் சுருக்கக் குறியீடுகளின் விரிவை எழுதுக.

(i) இ. ஒ. சே :- ..... (ii) இ. ம. வ :- .....

09) கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு சொற்றொடருக்கும் உரிய தனிச்சொல்லைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

(i) வைத்தியரின்றித் தாமே தமது நோய்க்குச் செய்துகொள்ளும் மருந்து :- .....

(ii) பகையரசர்களுக்குக் கொடுக்கப்படும் திறைப்பொருள் :- .....

www.ikeodu.lk













Learn Easy Books

அனைத்து தரங்களுக்குமான பயிற்சி புத்தகங்கள்,
செயலட்டைகள், தவணை பரீட்சை மாதிரிகள் போன்றவற்றை
உங்கள் முகவரியில் பெற்றுக்கொள்ள அழையுங்கள்

+94 767573 559

FB Page - https://www.facebook.com/lebslk

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம் A/L வரையான
அனைத்து தரத்தினருக்கும் அனைத்துப் பாடங்களையும்

www.lkedu.lk

இணையத்தில்
இலவசமாக கற்றுக்கொள்ளலாம்

FB Page - https://www.facebook.com/learneasylk

FB Group - https://www.facebook.com/groups/lkedu

(10) தரப்பட்டுள்ள குறுக்கெழுத்துப் புதிரைப் பூரணப்படுத்துக.

i. க		ii. து	
iii.		ம்	

மேலிருந்து கீழ்,

(i) "இனிப்பு" என்பதன் எதிர்கருத்துச் சொல்.

(ii) "துளை" என்பதன் ஒத்தகருத்துச் சொல்.

இடமிருந்து வலம்,

(i) சேவல் கூவும் அதுபோல தவளை .....

(iii) "அகம்" என்பதன் எதிர்கருத்துச் சொல்.

(11) பின்வரும் ஆங்கில வாக்கியங்களின் கருத்துக்களைத் தமிழில் எழுதுக.

(i) Be careful :- ..... (ii) Are you ready? :- .....

(12) தரப்பட்டுள்ள ஆங்கிலச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொற்களை எழுதுக.

(i) Eggs :- ..... (ii) Ant :- .....

(13) கீழே தரப்பட்டுள்ள ஆங்கில வாக்கியங்களில் உள்ள வெற்றிடங்களுக்குப் பொருத்தமான சொற்களை அடைப்புக்குள் இருந்து தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.

(i) ..... (Are / Is) this your pencil? (ii) I live ..... (in / on) Anuradhapura.

(14) பின்வரும் சிங்கள வாக்கியத்தின் கருத்தைத் தமிழில் எழுதுக.

කිරවා කොල පාට්ටය් :- .....

(15) பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தைத் தமிழ் எழுத்துகளில் எழுதுக.


உள்ளே வாருங்கள். :- .....

(16) 9 7 84 2 எண்கள் எழுதப்பட்டுள்ள நான்கு கார்ட்போர்ட் அட்டைகள் அருகே உருவினால் காட்டப்பட்டுள்ளன. இக்கார்ட்போர்ட் அட்டைகள் நான்கையும் ஒன்றுக்கொன்று அருகில் வைப்பதன் மூலம் அமைத்துக்கொள்ளக்கூடிய மிகப்பெரிய எண்ணை எழுதுக. .....

(17) ஒன்று ரூபா 16.00 வீதம் 4 முட்டைகளை வாங்கிக்கொண்டு வியாபாரியிடம் ரூபா 50.00 நாணயத் தாள்கள் 2 ஐக் கொடுத்தால் கிடைக்கும் மீதிப் பணம் எவ்வளவு? .....

(18)  இக்கடிகாரத்தில் பிற்பகல் நேரம் காட்டப்பட்டுள்ளது. நேரம் பி.ப 3 மணிக்கு 10 நிமிடங்கள் ஆவதற்கு இன்னும் எவ்வளவு நேரம் உள்ளது? .....

(19) ☐ + ☐ = XV அருகேயுள்ள இரு வெற்றுக்கூண்டுகளுக்கும் பொருத்தமான உரோம எண்குறிகள் இரண்டினை வெற்றுக்கூண்டுகளின் உள்ளேயே எழுதுக.

(20)  இவ்வுருவினால் காட்டப்பட்டுள்ளது உருளையொன்று சரிநடுவினால் இரண்டாக வெட்டப்பட்டுள்ள முறையை ஆகும். அதன்படி, இத்திண்மத்திலுள்ள,

(i) முகங்களின் எண்ணிக்கை யாது? ..... (ii) விளிம்புகளின் எண்ணிக்கை யாது? .....

(21) கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு வினாவினதும் வெற்றுக்கூண்டுக்குப் பொருத்தமான எண்ணை வெற்றுக்கூண்டின் உள்ளேயே எழுதுக.

(i)
$$\begin{array}{r} 7\square \\ \times\ \ 5 \\ \hline 390 \end{array}$$


(ii)
$$\begin{array}{r} 749 \\ -\ 2\square 4 \\ \hline 485 \end{array}$$

(22) ரவி வீட்டிலிருந்து பாடசாலைக்குப் பயணித்த திசைகள் ஒழுங்குமுறையில் தென்கிழக்கு, தென்மேற்கு ஆகும். அதன்படி, ரவி பாடசாலையில் இருந்து வீட்டிற்குப் பயணித்த திசைகளை ஒழுங்குமுறையில் எழுதுக. .....

(23)  இவ்வுருவின் எல்லாப் பக்கங்களும் நீளத்தில் சமனானவை. அதன்படி, இவ்வுருவிலுள்ள சமச்சீர் அச்சுகளின் எண்ணிக்கை யாது? .....

(24) (i) "அறுபத்து மூவாயிரத்து ஐநூற்று நாற்பத்தொன்பது" எனும் எண்ணிலுள்ள இலக்கங்களை ஒன்றுக்கொன்று கூட்டுவதன் மூலம் கிடைக்கும் எண்ணை இலக்கங்களில் எழுதுக. .....

(ii)  இவ்வுருவில் நிழற்றப்பட்டுள்ள பகுதியை ஒரு தசம எண்ணாக எழுதுக. .....

(25) 

உரு A யினால் காட்டப்பட்டுள்ள பாத்திரத்தில் $\frac{1}{2}$ பங்கு நீர் நிரப்பப்பட்டுள்ளது. A பாத்திரத்தை முழுமையாக நிரப்புவதற்கு B பாத்திரத்தால் இன்னும் எத்தனை தடவைகள் நீர் ஊற்ற வேண்டும்? .....

www.ikeduk

சுட்டெண்:-.....

(26) (i) 12 பென்சில்கள் வீதம் அடுக்கப்பட்ட 5 பெட்டிகளும், 6 பென்சில்கள் வீதம் அடுக்கப்பட்ட 4 பெட்டிகளும் உள்ளன.

அதன்படி, அனைத்துப் பெட்டிகளிலும் உள்ள பென்சில்களின் மொத்த எண்ணிக்கை யாது? .....

(ii) பின்வரும் எண்களை ஏறுவரிசைப்படுத்தும்போது நடுவில் வரும் எண் யாது?

19726 , 29742 , 12178 , 31563 , 22453 :- .....

(27)

திங்	செவ்	புதன்	வியா	வெள்	சனி	ஞாயி
				1	2	3
4	5	6	7	8	9	10
11	12	13	14	15	16	17
18	19	20	21	22	23	24
25	26	27	28	29	30	

இங்கு ஒரு வருடத்தின் குறிப்பிட்ட மாதத்திற்குரிய நாட்காட்டி காட்டப்பட்டுள்ளது. அதன்படி, வினவப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளை எழுதுக.


(i) இம்மாதத்தில் எத்தனை சனிக்கிழமைகள் உள்ளன? .....

(ii) இந்நாட்காட்டியினால் காட்டப்பட்டுள்ளது ஜூன் மாதத்திற்கு முன்னுள்ள ஒரு மாதமாகும். அதன்படி, இம்மாதத்தின் பெயரை எழுதுக. .....

(iii) இம்மாதத்திலுள்ள மூன்றாவது புதன்கிழமையின் திகதியை எழுதுக. .....


(28) இலங்கையில் புழக்கத்திலுள்ள நாணயத் தாள்களில் கையொப்பமிட்டுள்ள நபர்கள் இருவரின் பதவிகளைக் குறிப்பிடுக.

(i) ..... (ii) .....

(29) 

இவ்வுருவில் நிழற்றப்படாத பகுதி முழு உருவின் என்ன பங்காகும்? .....


*** இலக்கம் (30) தொடக்கம் (59) வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் உரிய விடையைத் தரப்பட்டுள்ள விடைகளில் இருந்து தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.**

(30) 


இவ்வுருவினால் காட்டப்பட்டுள்ள விளையாட்டு,

(1) உயரம் பாய்தல் (2) ஈட்டி எறிதல் (3) கோலூன்றிப் பாய்தல்

(31) உலர்மின்கலங்கள் இரண்டும் மின்குமிழ் ஒன்றும் செப்புக் கம்பிகளினால் இணைக்கப்பட்டுள்ள மூன்று சந்தர்ப்பங்கள் பின்வருமாறு காட்டப்பட்டுள்ளன. இச்சந்தர்ப்பங்களுள் மின்குமிழ் ஒளிரும் சந்தர்ப்பம்,

(1) 

(2) 

(3) 

(32) பெரும்பாலும் ஆடைகளில் அல்லது விலங்குகளின் உடல்களில் ஒட்டிப் பரம்பலடையும் வித்துகள்,

(1) நாயுருவி, துத்திரி (2) எருக்கலை, எண்ணை (3) றப்பர், ஆமணக்கு

(33) "வனைச்சில்லு" பயன்படுத்தப்படுவது,

(1) கொல்லன் கம்மாலையில் (2) உழவுத் தொழிலில் (3) மட்பாண்டத் தொழிலில்

(34) உயரமான கட்டிடத்தின் மேல்மாடிக்கு இலகுவாகச் செல்வதற்காகப் பயன்படுத்தப்படுவது,

(1) மின்தூக்கி (2) பாரந்தூக்கி (3) படிகள்

(35) சூழலுக்கு நேயமான பூச்சி நாசினியைத் தயாரிப்பதற்கு மிகவும் பொருத்தமான வித்து வகை,

(1) ஆமணக்கு (2) வேம்பு (3) பயறு

(36) இரண்டு மாவட்டங்களை மாத்திரம் கொண்டுள்ள ஒரு மாகாணம்,

(1) வடமத்திய மாகாணம் (2) கிழக்கு மாகாணம் (3) மேல் மாகாணம்

(37) அபய வாவியைக் கட்டுவித்த மன்னன்,

(1) தாதுசேனன் (2) மகாசேனன் (3) பண்டுகாபயன்

(38) கீழே தரப்பட்டுள்ள கூற்றுக்களில் பிழையான கூற்று,

(1) இலங்கை ஒரு தீவாகும். (2) இலங்கை இந்தியாவிற்கு வட திசையில் அமைந்துள்ளது.

(3) இலங்கை இந்து சமுத்திரத்தில் அமைந்துள்ளது.

(39) குறித்த வேளையில் உணவு உண்ணாதிருப்பதால் ஏற்படக்கூடிய நோய்,

(1) உயர் குருதியமுக்கம் (2) நீரிழிவு (3) இரப்பையழற்சி

(40) நோய்க் காவிகளான ஆட்கள் மூலம் பரப்பப்படும் தொற்று நோயொன்று அல்லாதது,

(1) யானைக்கால் நோய் (2) கொவிட்-19 (3) சின்னமுத்து

(41) கடைகளில் கொள்வனவு செய்யப்படும் பொருட்களில் உள்ள தரச்சின்னம் ஒன்றல்லாதது,

(1) PHI (2) SLS (3) ISO

(42) வண்ணத்துப்பூச்சியின் வாழ்க்கை வட்டப் பருவங்கள் சரியான ஒழுங்குமுறையில் எழுதப்பட்டுள்ள விடை,


(1) புழு - முட்டை - வண்ணத்துப்பூச்சி - புழுக்கூடு (2) முட்டை - புழு - புழுக்கூடு - வண்ணத்துப்பூச்சி

www.ikeou.lk

3) "வானத்தில் இருந்து விழும் ஒவ்வொரு மழைத்துளியையும் வீணாக்காது பயன்பெற வேண்டும்." எனும் கூற்றைக் கூறிய மன்னன்,
(1) மகாசேனன் (2) தாதுசேனன் (3) பராக்கிரமபாகு

4) 


இங்கு A, B ஆகிய உருக்களினால் காட்டப்பட்டுள்ள மின்குமிழ்களின் பெயர்களை ஒழுங்குமுறையே எழுதினால் கிடைப்பது,
(1) CFL, LED (2) LED, CFL (3) மின்சூள் மின்குமிழ், CFL



இவ்விலங்கை தேசப்படத்தில் P, Q, R, S, T ஆகியவற்றினால் 5 நகரங்கள் காட்டப்பட்டுள்ளன. அதன்படி, இலக்கம் (45), (46) ஆகிய வினாக்களுக்குப் பொருத்தமான விடைகளைத் தெரிவு செய்க.

(45) இயற்கைத் துறைமுகம் அமைந்துள்ள நகரம்,
(1) S (2) R (3) Q

(46) களனி கங்கை கடலுடன் கலக்கும் நகரம்,
(1) S (2) R (3) T


47) "வேட்டைக்காரன்" எனும் உடுத்தொகுதி காட்டப்பட்டுள்ள உரு,
(1)  (2)  (3) 

48) இங்கிலாந்தில் பிறந்து இலங்கையில் வாழ்ந்த உலகப் புகழ்பெற்ற விஞ்ஞான எழுத்தாளர்,
(1)  (2)  (3) 

49) இலங்கையில் ஒரே மாகாணத்திற்குரிய மாவட்டங்கள் இரண்டைக் கொண்ட விடை,
(1) இரத்தினபுரி, புத்தளம் (2) திருகோணமலை, மட்டக்களப்பு (3) அநுராதபுரம், மாத்தறை

50) 
பிரதான வீதிகளின் பாதசாரிக் கடவைகளில் உள்ள ஒளிச் சமிக்ஞை தூண்களில் இவ்வுரு காணப்படுவது,
(1) பச்சை நிறத்திலாகும். (2) மஞ்சள் நிறத்திலாகும். (3) சிவப்பு நிறத்திலாகும்.

51) பயிர்ச் செய்கைக்குத் தீங்கு விளைவிக்காத பிராணிகள்,
(1) சிற்றுண்ணி, மயிர்கொட்டி (2) மண்புழு, தேனீ (3) தண்டுக்கோதி, நத்தை

52) 

ரெஜிபோம் துண்டொன்றின் மீது சிறிய சட்டக் காந்தம் ஒன்றை வைத்து நீர்ப்பாத்திரம் ஒன்றிலிருக்கும் நீரின் மீது மிதக்கவிடப்பட்டுள்ள முறையை இவ்வுரு காட்டுகின்றது. இப்பரிசோதனையால் அறிந்துகொள்ளக்கூடியது,
(1) திசைகளையாகும். (2) காந்தத்தினால் கவரப்படும் பொருட்களையாகும். (3) காந்தத்தின் நிறையையாகும்.

53) உடலிற்குப் பாதுகாப்பைத் தரும் உணவுகள்,
(1) புரதம் அடங்கிய உணவுகள். (2) காபோவைதரேற்று, கொழுப்பு அடங்கிய உணவுகள்.
(3) விற்றமின்கள், கனியுப்புக்கள் அடங்கிய உணவுகள்.

54) வாகனங்களுக்குப் பயன்படுத்தப்படும் எரிபொருள் ஒன்றல்லாதது,
(1) மண்ணெண்ணெய் (2) பெற்றோல் (3) டீசல்

55) பயிரிடுவதற்குப் பொருத்தமான வித்துகள்,
(1) முதிர்ச்சியடையாத வித்துகள் (2) பழுது அற்ற வித்துகள் (3) பூச்சித் தாக்கம் அடைந்த வித்துகள்

56) சேனைகளில் பயிரிடப்படும் பயிர்கள் அல்லாதவை,
(1) குரக்கன், சோளம் (2) எள்ளு, பாசிப்பயறு (3) நெல், அன்னாசி

57) தேசப்படங்களில் சிவப்பு நிறத்தினால் காட்டப்பட்டுள்ளவை,
(1) பெருந்தெருக்கள் (2) அதிவேகப் பாதைகள் (3) புகையிரதப் பாதைகள்

58) இலங்கையில் அமைந்துள்ள பிரதான துறைமுகம்,
(1) அம்பாந்தோட்டைத் துறைமுகம் (2) கொழும்புத் துறைமுகம் (3) திருகோணமலைத் துறைமுகம்

59) தென் மாகாணத்தில் கடலுடன் கலக்கும் நதிகள்,
(1) நில்வள கங்கை, வளவ கங்கை (2) களனி கங்கை, களு கங்கை (3) மகாவலி கங்கை, மாணிக்க கங்கை

60) **"எங்கள் பாடசாலையில் கல்விச் சுற்றுலா செல்வது நாளைய தினமாகும்" எனும் தலைப்பின் கீழ் மூன்று வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய், பயனிலைத் தொடர்பும், எழுத்துக் கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்.)**

(1) .....

(2) .....

(3) .....

www.ikeduj.lk